DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SANKARANKOVIL.

Calender --- STC.131/2016

Miscellaneous ---

Preliminary Register ---

Sessions --- PW.1

Deposition of witness for Prosecution Defence Case

Name : நாராயணசாமி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the previsions of Act X of 1873 of the day of 04.09.2023

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

**1ம் எதிரி நிறுவனத்திற்கும், எனக்கும் வாடகைக்கு வேன் இயக்கியதுதான் வரவு செலவு என்று சொன்னால் சரிதான். வாடகைக்கு வேன் இயக்கியது சம்மந்தமாக எந்த ஒரு ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால்தான் எனக்கும், எதிரியின் நிறுவனத்திற்கும் என்ன வரவு செலவு என்று தெரிய வரும் என்று சொன்னால் சரிதான். கரூர் வைஸ்சியா காசோலை எண்.000203 காசோலையை1ம் எதிரி நிறுவனத்திற்கு கொடுத்தேனா அல்லது தனிநபரான ராமசுப்பிரமணியராஜா பெயருக்கு கொடுத்தேனா என்றால் சுப்பிரமணியராஜா பெயருக்குதான் கொடுத்தேன். கரூர்**

வைஸ்சியா வங்கி காசோலை சுப்பிரமணியராஜா அவர்களால் வங்கியிலிருந்து பணமாக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் காசோலை கொடுத்த காலத்தில் ராமசுப்பிரமணியராஜாக்கு கரூர் வைஸ்சியா வங்கியில் எந்த வங்கி கணக்கும் கிடையாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. ரூ.4 லட்சம் மதிப்புள்ள காசோலையை வங்கி கணக்கு இருந்தால் மட்டும்தான் பணமாக்கி கொள்ள முடியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த காசோலை எண்.000203 ஐ 1ம் எதிரி நிறுவனம் வசூலுக்கு தாக்கல் செய்து பணமாக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் ராமசுப்பிரமணியராஜா என்ற தனிநபரும் வசூலுக்கு தாக்கல் செய்து பணமாக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வருமான வரி கணக்கினை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அந்த சமயத்தில் நான் காசோலை கொடுத்த சமயத்தில் நான் வருமான வரி செலுத்தவில்லை. எந்த வருடத்திலிருந்து நான் வருமான வரி கணக்கு செலுத்தினேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நடப்பு ஆண்டில் நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நடப்பு ஆண்டிற்கு முந்தைய ஆண்டும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். 2020க்கு பிறகு நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன். இன்றைய தேதி நிலவரப்படி நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்று சொன்னாலும், எதிரி எனக்கு கடன்பட்டவர் என்ற நிலையில்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். பொதுவாக வருமான வரி கணக்கு சொத்தின் விபரங்கள் மற்றும் கடன் பற்றி குறிப்பிடப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். 2020ம் ஆண்டிற்கு பிறகு நான் தாக்கல் செய்த வருமான வரி கணக்கு எதிரியின் பெயரை கடனாளியாக குறிப்பிட்டு, அவர் எனக்கு தரவேண்டிய தொகையை பற்றி நான் அதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனக்கும், எதிரி நிறுவனத்திற்கும், ராமசுப்பிரமணியராஜாவிற்கும் எந்தவிதமான பற்றும் இல்லாத காரணத்தினால்தான் நான் எனது வருமான வரி கணக்கில் அதைப் பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருந்த காலக்கட்டத்தில் காவல் துறை கண்காணிப்பாளரிடம் எதிரி மீது ஒரு புகார்

கொடுத்தேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. எதிரி மீது கடந்த நவம்பர் மாதம் 2016ம் வருடம் நான் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. 29.11.2016 அன்று என் மீது ராமசுப்பிரமணியராஜா சங்கரன்கோவில் நகர காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளருக்கு புகார் அளித்தார் என்று சொன்னால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. 29.11.2016 அன்று நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் எதிரியை சட்டத்திற்கு புறம்பாக பணத்தை செலுத்த வைக்கவேண்டும் என்று காவல்நிலையத்தில் மிரட்டப்படுவதாக காவல் உதவி ஆய்வாளருக்கும், எனக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2015 அக்டோபருக்கு பிறகு எனது நிறுவனத்திலிருந்து எதிரியின் நிறுவனம் மூடப்பட்டதால் வாகனத்தை இயக்கவில்லை என்று சொன்னால் எனக்கு தேதி சரியாக ஞாபகமில்லை. ஆனால் எதிரியின் நிறுவனம் மூடப்பட்டதிலிருந்து வாகனத்தை இயக்கவில்லை. இந்த வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்பே எதிரியின் நிறுவனத்திற்கு வாகனத்தை இயக்குவதை நான் நிறுத்திவிட்டேன் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கில் கூறியுள்ள காலகட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் காசோலை எண்.000476 1ம் எதிரி நிறுவனத்திற்கு நான் 07.10.2015 அன்று நான் கொடுத்ததாக கூறும் கடனுக்காக வழங்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 2010 அக்டோபருக்கு பிறகு நான் எதிரி நிறுவனத்திற்காக எந்த வாகனமும் இயக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2010 அக்டோபருக்கு முந்தைய வாகன நிலுவை தொகை 21.12.2015, 23.12.2015, 30.12.2015, 31.12.2015 ஆகிய தேதிகளில் எனது மகன் விக்னேஷ் வவுச்சர் மூலம் பணத்தை பெற்றுக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், 2ம் எதிரி நிறுவனத்திற்கும் எந்தவிதமான கடன் இல்லை என்பதால் 1ம் எதிரி நிறுவனத்திற்கு எதிராக இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிரி நிறுவனத்திற்காக 1ம் எதிரி மீது கடன் பெற்றுக்கொண்டதாக வழக்கு தாக்கல் செய்வதற்கு அடிப்படை முகாந்திரம் எனக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. ராமசுப்பிரமணியராஜா என்ற தனிநபருக்கும், எனக்கும் எந்த விதமான பற்று வரவு கிடையாது என்று சொன்னாலும், அதனால் இந்த வழக்கு ராமசுப்பிரமணியராஜா என்ற தனிநபர் மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவிலுள்ள சங்கதிகள்

**அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.**

**(Complainant present. Accused absent. )**